உ







# பொங்கல் (மகர சங்கராந்தி)

# போகி, மாட்டுப் பொங்கல்,

# கன்னிப்பொங்கல் வரலாறு.

விலை ரூ 0-50 வெளியீடு - 16

# சமர்ப்பணம்

மாதா, பிதா, குரு என்ற வாக்யப்படி இவ்வெளியீடு எனது மாதா, பிதா தஞ்சை ஜில்லா சீர்காழியில் உள்ள லக்ஷ்மி வைத்தியனுதய்யர் (ரிடையர்ட் லோகல் பண்ட் ஆடிட்டர்) ஸாதபிஷேகங்கள் கழிந்து ஸ்ரீ ஆதிபராசக்தியின் திருவடி யடைந்த ஸ்ரீ பிதா மஹர்களுக்கு அர்பணம் செய்கிறேன்.

குருர் பிரும்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேச்வர குருஸ்ஸாக்ஷாத் பரம் பிரும்ஹ தஸ்மை ஸ்ரீ குருவே நம.''

ஸ்ரீ சங்கர பகவத் பாத
ஸாஷத் சிஷ்ய பரம்பரை
குருகளுடைய பாதங்களுக்கு
மலரடி பணிகின்றேன்.

சொல்லும், பொருளும் இணைந்திருப்பதைப் போல் இணைபிரியாமல் இருக்கும் உமா சங்கரர்களின் பாதங்களில் இதை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

''சர்வேஜனு; ஸுகினோ பவந்து.
ஓம் தத்ஸத்.

## பதிப்புரிமை இல்லை:–

யார் எத்தனை பிரதிகள் வேண்டுமானுலும் அனுமதியுடன் அச்சிட்டு இலவசமாக விநியோக பிரசாரம் செய்யலாம் ஆனுல் இதில் (Advertisements) விளம்பரங்கள் இருத்தல் கூடாது.

ஆலயத்தில் என்றென்றும் கம்பீரமாக துவஜஸ்தம்பம் காண்பது போல் இந்துமதம் தழைத்தோங்க வழியாய் இருக்கவும் சதுர் வர்ணத்தாரும் க்ஷேமமாயிருக்கவும் சமூக ஒற்றுமைக்கும் எல்லோரும் ஏகோபித்த மனத்துடன் கூடியிருக்க இப்பிரதியை நன்கு படித்து உணர்ந்தபின் தமது ஆப்த நண்பர்களுக்கும் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உ



" முன்னவனே யானை முகத்தவனே முக்தி நலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாள் சரண் "………
— திரு அருட்பா.

"காசினி யிருளை நீக்குங் கதிரொளியாகி யெங்கும்
பூசனை யுலகோர் போற்றப் புசிப்போடு சுதத்தை நல்கும்
வாசி யே முடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா வெனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி.

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

ஆன்மாவைப் பாவங்களினின்று நீக்கிப் பண் படுத்துவது பண்டிகை.

இறைவன் திருவருளைப் பெறுவதற்காக மனத்தினுல் தியானத்தினுல் போற்றி, தலையால் வணங்கி வழி படும் விழாநாள் இல்லாத மாதமே தமிழகத்தில் இல்லை.

மார்கழி முப்பது நாளும் வீட்டு வாயலில் சாணியி லிட்ட பரங்கிப் பூக்களை முப்பது எரி முட்டைகளாக ரட்சித்து அவைகளை சூரியனுக்காம் பொங்கலைப் பக்குவப் படுத்தும் அக்னிக்குச்சிலரும், மறுநாள் மாலை சந்திரனை உத்தேசித்துப் புனலில் சிலரும், அர்பணம் செய்கின்றனர். இப்பின் வழக்கத்தைப்பற்றியே குற்ருலக் குறவஞ்சியில் "எருவிட்டெரிந்ததற்கோ வெண்ணிலாவே" நம் நாட்டில் எல்லா பெண்களும் தம் உடன் பிறந்தாரின் க்ஷேமத்தைக் கருதி நோற்கும் நோன்பு கனு நோம்பு.

ஆறு ருதுக்களில் மார்கழியும், தையும் ஹேமந்த ருது எனும் முன் பனிக்காலம். இயற்கை நிலங்களுக்குள் அக்காலத்துக்குரியது மஞ்சள் நிறம். பரங்கிப் பூவும், சாமந்தி, ஜவந்திப்பூ நிறைந்த காலம். ஹேமம் என்னும் சொல்லிற்குப் பொன் என்பது பொருள். பொன் னிறமே மஞ்சள் நிறம். நாட்டுக் கரும்பிலும் மஞ்சள் நிறமே. மஞ்சள் நிறமே மங்களச் சின்னம். அமங்கல மாம் பீடைகளை யெல்லாம் ஒழித்து வீடு, ஆடை, கலம் எல்லாவற்றையும் புதுப்பித்து, மேகத்திலும், ஆனினங் களிலும், செந்நெல்லிலும் விளங்கும் இறைவனது சக்தியை நன்றியறிவுடன் நினைத்து நினைத்துப் பூரித்துப் பாலைப்போல் தூயமனம் பொங்கிப் பொங்கி மங்களப் பொருட்களை யெல்லாம் அவருக்குக் காட்சிப் பொருளாகக் கொடுத்து, அடுத்த சங்கராந்திவரை இங்கு பொங்கிய இத்தூய்மையின் சீர்குன்ருது நம்மை ரக்ஷிக்குமாறு இறைவனை இறைஞ்சுவோமாக.

தை மாதத்தில் செந்நெல் அறுவடையாகப் போகிறது. செந்நெல்லுக்கும், எந்நெல்லுக்கும், எந் நலத்திற்கும் எல்லாம் வல்ல ஒன்ருகும் இறைவனும் காரணம்.

அவன் எவ்விதம் காரணமாகிருன்? உழவிற்கும் எருவிற்கும் காரணமான ஆனின மூலமாகவும், இந்திர னுடைய அதிகாரத்தில் விடப்பட்டிருக்கிற மழை பொழி யும் மேகத்தின் மூலமாகவும், மேகத்திற்குக் காரணமான சூரியன் மூலமாகவுமே.

எந்தெந்த முறைகளில் எந்தெந்த மூலமாக எந்தெந்த காலங்களில் ஈசனது கருணை நம்மை வாழ்விக் கிறதோ அந்தந்த முறைகளில் அந்தந்த மூலமாக அந்தந்த காலங்களில் அவனுடைய நினைவை வருத்திக் கொண்டு நமது நன்றியறிவை அவனுக்குச் செலுத்தத் தவறினேமானுல் நாம் மனிதத்தன்மையுடையவராகோம் மிருகங்களில்கூட எவ்வளவோ செய்நன்றி மறவாமை உண்டு. சாணி உருண்டையும், அருகம்புல்லும், கோவர்த்தனகிரியை நினைவூட்டுவதன் மூலம் கண்ணனை நினைவூட்டுகிறது.

வடத்துருவமாம் மேருவின் சிகரத்திற்கு நேரே யுள்ள வானுலகிற்கு ''உத்தராயணதினமே'' உதய தினமாம்.

அன்று மனிதவர்க்கத்திற்குப் பொங்கல். மறுநாள் ஆனினத்திற்குப் (மாட்டுப்) பொங்கல்.

முதல் நாளில் "பால் பொங்கிச்சா" என்ற அன்பு கேள்வி. மறுநாள் பொங்கும் பாலைக் கொடுத்த ஆவிற்குப் பொங்கல்.

பீடையை ஹரிக்கும் பீடாஹாரி தெய்வத்திற்கு, முந்தியநாள் பொங்கல் சேஷத்தால் கனுப்பிடியென்னும் பலியிடுகிறோம். பெண்மணிகள், சுமங்கலிகள் 'கொப்பி' யெனப்படும் கும்மியடிப்பார்கள்.

தக்ஷிணாயனமாம் பேரிரவு கழித்தபின்னர் உடை, மட்கலம், பாய் அவைகளையெல்லாம் பழையன கழித்துப் புதியன மாற்றுகிறோம். பீடை கழித்து விடுகிறோம். குழவிகளையும்கூட நீராட்டு விக்கிரோம். புதுமைப் பெரு வாழ்வு வாழ்வதற்கு வீட்டை சுத்தம் செய்து கொண்டாடும் முதல் திருநாளே போகி என்று கொண்டாடப்பட்டு வருகிறது. போகி என்பது இந்திர பகவானுக்குள்ள பெயர்.

மார்கழி மாதத்தோடு மழைகாலம் முடிவு பெறு கிறது, இது மழைக்கு நன்றி செலுத்தும் நாளாகவும் "காரி - கழி" விழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மழைக்குக் கடவுள் இந்திரன் ஆனதால் மழை பெய்து சுபிட்சமாக இருக்க இந்திர பூஜை செய்ததாக வரலாறுள்ளது. இவ் விழாவைப்பற்றி "வால்மீகி; காளிதாஸர்; நச்சினார்க்கினியாரும் விளக்கம் தந்துள்ளார். இந்த "இந்திர விழா" "போகி" சோழவள நாட்டில் "செம்பியன்" என்ற அரசனால் ஆரம்பிக்கப்பட்டதாக வும், காவிரிப்பூம்பட்டிணத்தில் ஆண்டுதோறும் இவ் விழா கொண்டாடியதாகவும் நூல்களிலிருந்து தெரிய வருகிறது.

"ஆன்மாவைப் பாவங்களினின்று நீக்கிப் பண் படுத்துவது "பண்டிகை". ஆன்மாவின் பாவங்களைக் கண்டிப்பது "கண்டிகை" ஆகையால் அம்மை சக்தியை வழிபடும் நாள் போகி.

## மகர சங்கிரமே சக்தி.

இதன் வரலாறு அமிசுமான் என்கிற ஆகமத்தில் உள்ளபடி:—

"மகர சங்கிரமே சக்தி" என்றும், சக்தியான வள் ஆடி மாதம் முதல் மார்கழி மாதமுடிய "தக்ஷிணாயனம்" காலத்தில் மானிட ஜன்மாவுக்கு மூதேவி வடிவமாயும்; பசுக்களுக்கு "புலி வடிவமாயும்" பீடை பிடித்துக்கொண்டிப்பதாகவும், இந்தப்பீடை நிவர்த்திக்காகவும் மானிட ஜன்மம் நலம் அடையும் பொருட்டும் தை மாதம் முதல்நாள் 'மகர சங்கராந்தி' உத்தராயண புண்ணிய நாளில் சூரிய பகவான் முதல் பிர்மா, விஷ்ணு முதலானவர்கள் வழிபட்டு பூஜித்து பாற்பொங்கல் இதற்கு "கூடாரவல்லி" நைவேத்தியம் என்றும் ஸ்ரீரங்கம் கோவிலில் வழங்கப்படுகிறது.

பிதிர் தேவதைகளுக்காக காலையில் தர்பணம் எள்ளும் தண்ணீரும் (எள்நீர் இறைத்தல்) பசு தானம், தசதானமும், கஜதானம் முதல் பதினாறு மகாதானமும் செய்வது.

ஆடி முதல் மார்கழி முடிய இந்த ஆறு மாதங்களும் நாடும், வீடும், மூதேவி ஆண்டதினால் (லக்ஷ்மி தேவியின் அக்காள்தான் மூதேவி) உத்தராயண புண்ணியதினத்தில் கிராம சாந்தியும், கிரக சாந்தியும் (சுத்தம்) செய்வது. மறுநாள் காலையில் பசுக்களை குளிப்பாட்டி அலங்காரம் செய்து வழிபடுவதின் தாத்பரியம் பசுக்களை இந்த ஆறு மாதங்கள் புலிகள் அடித்துத் தின்றுகொண்டிருந்தபடியால் அன்றைய நாள் சாயங்காலம் பரமசிவன் பசுக்களைக்கொண்டு புலிகளைத் துரத்தச் செய்து புலிக்கூட்டங்களை அழித்து சக்தியையும் அழித்து மானிடருக்கும் பசுக்களுக்கும் நன்மையைத் தந்தருளின நன்நாள்.

இரண்டாம் நாள் பெரும் "பொங்கல்" 'பால் பொங்கிற்று' சிவ வழிபடும் நாள். மூன்றும் நாள் "செல்வம்" வழிபடும் நாள் "மாட்டுப்பொங்கல்". மாடு என்றால் செல்வம். நான்காம் நாள் "கனிநாள்" உவப்புறு நாள், வழிபாடு விழாவினால் உண்டான உவப்பின் காரணமாக ஆலயம் சென்று இறைவனை கண்டுக் வழிபடுதல். இதையே காணும் பொங்கல் என்கிறார்கள்.

## மகர சங்கராந்தி தைப்பொங்கல்.

மகர சங்கராந்தி என்பது சூரியன் தென்திசை " தக்ஷிணாயனத்திலிருந்து வடதிசை " உத்தராயண பக்கம் திரும்பும் நாள்.

வேதங்கள் சூரியனின் பேராற்றலைப் பலவிதமாக வர்ணிக்கின்றன. சூரியனைப் பரம்பொருளாக ஆதித்ய ஹிருதயம் வர்ணிக்கிறது.

ரிக்வேதம் சூரிய தேவனை "ஸ்வர்ணன், சரண்யு; உஷஸ்; அருணோதய அழகையும்" ஸாமவேதம் சுக்ரீயம் என்னும் ஆருவது கானத்திலுள்ள ஸாமாக்கள் சூரியனை பலவாருக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இவை தவிர பவிஷ்யத் புராணம்; பிரம்ம புராணம் அக்னி புராணம்; பவிஷ்யோத்ர புராணம்; காளிகா புராணம்; மார்க்கண்டேய புராணம்; மத்ஸ்ய, வராக புராணம்; கருட புராணம்; வேதாத்தியாயப் பிராம்மணம் பழம் பெரும் நூலில் அன்னை காயத்ரியின் வடிவைக் குறிக்கையில் சூரிய சந்திரர்களை தேவிக்கு கண்களாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

பிரமாண்டத்திற்குக் காரணமாகியும் அவ்க்யத மாயும், அநாமயமாயும், பிரப்பிடமாகியும், எல்லா வற்றிற்கும் லயத்வமாகியும் விளங்கும் "சர்வேஸ்வர" னிடத்தினின்று சிருஷ்டி உண்டாகிறது. ஆகாயமும், ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினி யும், அக்கினியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பிருதிவியும், இந்தப் பஞ்ச பூதத்து மகமான பிரமதேவர் உண்டாக்கி பிரம்மாண்டத்தை சிருஷ்டி செய்தார். இவற்றுள் பூலோகம்; புவர்லோகம்; மஹாலோகம்; ஜனலோகம்; தபோலோகம்; பிதுர்லோகம்; சத்திய லோகம் என மேலோகங்கள் ஏழும்; அதல, விதல, சுதல, சுராதல, மகாதல, ரசாதல, பாதாள லோகம் எனக் கீழ் உலகங்கள் ஏழும், ஆக ஈரேழு பதினான்கு உலகங்களுக்கு ஆதாரமாவதற்கு ஸ்ரீ ஆதிசேஷன் என்கிற மகாவிஷ்ணு ஸ்ரீ நாராயணர் " சூர்யவம்ச " அவதார வழியாக ஸ்ரீமன் நாராயணருடைய புத்திரன் பிரம்மாவும், பிரும்மாவின் புத்திரனாக மரிசியும், மரிசியின் புத்திரன் காசியபரும், காசியபரின் எட்டாவது புதல்வ ராக தைத்ரீயத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

சூர்ய வம்சம் 5-வது வரிசையில் சூர்யன் புத்திரன் மனு இப்படியாக சூர்ய வம்சத்தில் கடைசியாக 65-வதில் தசரதனின் புத்திரர் ஸ்ரீ ராமர், லக்ஷமணர், பரதன், சத்ருக்னன்.

## சூரிய பகவான்.

காசியப கோத்திரரும் அதிதியின் பிள்ளையுமான கலிங்க நாட்டினர் ஒரு கையில் தாமரை மற்றோர் கை அபயம் கொண்டவர். சிந்தூர ஆடையும், சந்தன மாணிக்கமாலையும் அணிந்து செந்நிறக் கொடியின் கீழ் எழு குதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்து மேருவை வலம் வருபவர். காலத்தையே ஸ்வரூபமாக உடையவர்.

சூரிய பகவானின் கிரணங்கள் கணக்கில் அடங்கா, இதில் முக்கியமானது ஏழு :-

(1) ஸுஷுமண (2) ஹரிகேச (3) விச்வசர்மா (4) விச்வ வியாஸ (5) ஸம்யத்வஸ (6) அர்வாக்யவஸ (7) ஸ்வராட் என்று வேதப் பிரசித்தமான திரு நாமங்கள் கொண்டது.

பன்னிரெண்டு மாதத்தில் "ஆதித்யர்கள்" அம்சத்தில் சூரியன் உலகுக்கு ஒளி தருவதாகக் கூறுவர்:-

(1) விஸ்வான் (2) ஆர்யமா (3) புஷா (4) த்வஷ்டா (5) ஸவிதா (6) பவன் (7) தாதா (8) விதாதா (9) வருணன் (10) சக்கரன் (11) உருக்கிரமன் (12) சூரியன் என்பன.

சூரியன் ஆண்டு தோறும் 700,000,000,000,000,000, கிலோ வாட்டு – மணி ஆற்றலை இடை விடாமல் வீசி வருகிறது. (பெ. நா. அப்புஸ்வாமி அவர்களின் கட்டுரை "கதிரவனை ஏவல் கொள்ளலி" லிருந்து இந்த மணிக் கணக்கு, நன்றி.) உலகனைத்துக்கும் வெப்பம் அளிக்கிறது. தாவர, விலங்கு, பறவை மக்களுக்கு வாழ்வளித்து வருகிறது. வானில் அவ்வளவு தொலைவிலிருந்து அது ஓய்வே இல்லாமல் நான்கு பக்கமும் வீசிவரும் ஆற்றலை நம்மால் கூட்டவோ குறைக்கவோ முடியாது. சூரிய பகவானை பாரசிக தேசத்தில் பார்ஸிகர்கள் என்ற இனத்தாரால், மகி என்ற வம்சத்தின் "மித்ரா" என்ற

ஒளி தேவனை வழிபட்டதாக வரலாரிலிருந்து தெரிய வருகிறது. ஆனால் ஹிந்துக்கள் வழிபாட்டிற்கும், மற்ற இனத்தினர் வழி பாட்டிற்கும் வித்தியாசம் உண்டு. வழி பாட்டில் மாறுபட்டிருந்தாலும் பொருள் ஒன்றுதான்.

இறையவரும் — உரைவிடமும்.

## இரு சுடர்.

இந் நில வுலகிற்கு ஒளி தரும்
சூரியனையும்; சந்திரனையும்
தமிழகம் போற்றி வருகின்றது.

சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துரைக்குமிடத்து, ஞாயிறு, திங்கள் என்னும் இரு சுடர்களையும் போற்று கிறது.

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'
'திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்'
மங்கல வாழ்த்துப் பாடல்.

## ஸ்ரீ ரஸ்து.

மகர சங்கராந்தியன்று காலையில் சூரியோதய ஆரம்பத்தில் பக்தர்கள் (அதிலும் பிராமண சமூகத்தினர் கள்) உலக க்ஷேமத்தின் பொருட்டும் பருவ காலத்தில் வருணபகவான் கிருபையால் மும்மாரி மழைபெய்வதற் காகவும் பல நன்மைகளையும், புத்தி, ஞானம் ஒளி (கண்) இவைகள் ஆயுள்காலம் வரை மங்காமலிருக்க. பிரதி ஞாயிறு தோறும் சூர்ய நமஸ்காரம் செய்தால் பலனை சீக்கிரம் அடையலாம். அப்படி ஒவ்வொரு ஞாயிறுதோறும்செய்ய சௌவுகரியம் இல்லாமல்போனால் ஒவ்வொரு மாதம் முதல் ஞாயிறன்றும் சித்திரை; ஆவணி; கார்த்திகை; தை மாத எல்லா ஞாயிறுகளி லும் செய்வது உத்தமம். இப்படி செய்யுமாறு அடியேன் மிக தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

## ஹரி: ஓம்

ஸ்நம்; ஸந்தியாவந்தனம் செய்த பிறகு ஆசமனியம் செய்யவும்;-

ஸுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்,
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப ஸாந்தயே :

ப்ராணயாமம்:- ஓம் பூ:....................

பூர்ப்பு வஸ்ஸுவரோம்.

(பூணல் போடாதவர்களும் இந்த சூர்ய நமஸ்காரம் செய்யவும்)

மமோபாத்த; ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ''சாயா ஸம்ஜ்ஞா ஸமேத ஸ்ரீ சூர்ய நாரயண ப்ரஸாத ஸித்யர்த்தம் சூர்ய நமஸ்காரம் கரிஷ்யே, அப உபஸ் ப்ருஸ்ய.

கணனாம்த்வா கணபதிகும் ஹவாமஹே கவிம் கவிந முபமஸ்ரவஸ்தமம் ஜ்யேஷ்ட ராஜம் ப்ரஹ்மணம் ப்ரஹ்மணஸ் பத ஆந: ஸ்ருண் வந்நூதிபிஸ் ஸீத ஸாதனம்.

ஸ்ரீ மஹா கணபதயே நம:
வினதா தனயோ தேவ:
கர்ம ஸாக்ஷி ஸுரேஸ்வர:
ஸப்தாஸ்வ: ஸப்தரஜ்ஜுஸசா
ப்யருணோமே ப்ரஸீதது.
ரஜ்ஜு வேத்ர கஸா பாணீம்
ப்ரஸன்னம் கஸ்யபப்த்மஜம்:
ஸர்வாபரண தீப்தாங்க
மருணம் ப்ரணமாம் யஹம்
அருணய நம:

அக்னி மீளே புரோஹிதம் யஜ்ஞஸ்ய தேவம் ருத்விஜம் ஹோதாரம் ரத்ன தாதமம், ருக்வேதாத்மனே ஸுர்ய நாராயண ஸ்வாமினே நம:

இஷேத்வோர் ஜேத்வா, வாயவ: ஸ்தோ பாயவ: ஸ்ததே வோவ: ஸவிதா ப்ரார்பயது ஸ்ரேஷ்டதமாய கர்மணே யஜுர் வேதாத்மனே ஸுர்ய நாரயண ஸ்வாமினே நம:

அக்ன ஆயாஹி வீதயே க்ருணனோ ஹவ்ய தாதயே, நி ஹோ தா ஸத்ஸி பர்ஹிஷி, ஸாம வேதாத்மனே ஸுர்ய நாராயண ஸ்வாமினே நம:

ஸன்னோதேவி ரபிஷ்டயே ஆபோப வந்து பீதயே ஸம் யோரா பிஸ்ரவந்துன: அதர்வண வேதாத்மநே ஸுர்ய நாராயண ஸ்வாமினே நம:

க்ருண்ணி: ஸுர்ய ஆதித்யோன ப்ரவா வாத்யக்ஷரம், மதுக்ஷரந்திதத்ரஸம்- சத்யம் வைதத்ரசமாயோ ஜ்யோதீர சோம்ருதம் பரஹ்ம பூர்ப்பு வஸ் சுவ ரோம், சாயா சமஜ்ஞாச மேத ஸ்ரீ சூர்ய நாரயண ஸ்வாமினே நம;

தரணீர் விஸ்வதர்சதோ ஜ்யோ தீஷ்க்ருதஸிசூர்ய, விஸ்வமாபாஸிரோசனம், உபயாம் க்ருஹிதோஸிசூர்யாயத்வா ப்ராஜ ஸ்தவ ஏஷதே யோனி; சூர்யாயத்வா ப்ராஜஸ்வதே சாயா க்ம்ஜ்ஞாசமேத ஸ்ரீ சூர்ய நாரயண ஸ்வாமினே நம:

1 ஓம் ஆம் உத்யன்னத்ய மித்ரமஹ:
மித்ராய நம:

2 ஓம் ஹ்ரீம் அரோஹந் றுத்த ராந்திவம்
ரவயே நம:

3 ஓம் க்ரோம் ஹ்ருத்ரோகம் மம சூர்ய
சூர்யாய நம:

4 ஓம் ஹ்ரைம் ஹரிமானஞ்ச நாசய,
பானவே நம:

5 ஓம் ஹ்ரௌம் சுகேஷுமே ஹரிமாணம்
ககாய நம:

6 ஓம் ஹர: ரோபணுகாசு தத்மஸி
புஷ்ணே நம:

7 ஓம் ஆம் அதோ ஹாரித்ர வேஷுமே
ஹிரயண் கர்ப்பாய நம:

8 ஓம் ஹ்ரீம் ஹரிமாணந்நிதத் மஸி
மரீசயே நம:

9 ஓம் க்ரோம் உதகாதய மாதித்ய
ஆதித்யாய நம:

10 ஓம் ஹ்ரைம் விஸ்வேன சஹா
சாசஹ சவித்ரே நம:

11 ஓம் ஹ்ரௌம் த்விஷந்தம் மமரந்தயன்
அர்க்காய நம:

12 ஓம் ஹ்ர: மோ அஹம் த்விஷதோ ரதம்,
பாஸ்கராய நம:

13 ஓம் ஆம், ஹ்ரீம் உத்யந்நத்ய மித்ரமஹ:
ஆரோஹ துத்தராம் திவம், மித்ர ரவி
ப்யாந் நம:

14 ஓம் க்ரோம் ஹ்ரைம் ஹ்ருத்ரோகம் மம
சூர்ய ஹரிமாணஞ்ச நாசய
சூர்ய-பானுப்யாம் நம:

15 ஓம் ஹ்ரௌம் ஹர: ஸுகேஷுமே
ஹரிமாணம், ரோபணுகாஸு தத்மஸி
கக பூஷ்ப்யாந் நம:

16 ஓம் ஆம் ஹ்ரீம் அதோ ஹராரித்ர
வேஷுமே, ஹரிமாணந் நிதத்மஸி
ஹ்ரண்ய கர்ப்ப மரீசிப்யாந் நம:

17 ஓம் க்ரோம் ஹ்ரைம் உதகாதய மாதித்ய:
விஸ்வேன ஸஹஸாஸஹ, ஆதித்ய
ஸவித்ருப்யாந் நம:

18 ஓம் ஹ்ரௌம் ஹ்ர : திவிஷந்தம்
மமரந்தயன், மோ அஹம் த்விஷ–
தோரதம்: அர்க்க பாஸ்கராப்யாந் நம :
19 ஓம் ஆம், ஹ்ரீம் க்ரோம், ஹரைம்
உத்யன்னத்ய மித்ரமஹ, ஆரோஹ
நுத்தராம் திவம், ஹ்ருத் ரோகம் மம
ஸூர்ய, ஹரிமாணஞ்ச நாஸ்ய
20 ஓம் ஹ்ரௌம், ஹ்ர : ஆம், ஹ்ரீம்
சிகே ஷூமே ஹரிமாணம்
ரோபணு காசூ தத்மஸி, அதோ
ஹாரித்ர வேஷூமே, ஹரிமாணந்
நதத்மஸி, ககபூஷ ஹிரண்ய கர்ப்ப
மரீசீப்யோ நம :

21 க்ரோம், ஹ்ரைம், ஹ்ரௌம்,
ஹ்ர : உதகாதய மாதித்ய: விஸ்வேன
சஹ சாசஹ, த்விஷந்தம், மம
ரந்தயன் மோ அஹமத்விஷ தோரதம்
ஆதித்ய சவித்ரர்க்க பாஸ்கரேப்யோ நம :
22 ஓம் ஆம், ஹ்ரீம் க்ரோம் ஹரைம்,
ஹ்ரௌம், ஹ்ர : உத்யன்னத்ய மித்ரமஹ :
ஆரோஹ நுத்தராம் திவம் ஹ்ருத் ரோகம்
மம சூர்ய, ஹரிமாணஞ்ச நாசய,
சுகேஷூமே ஹரிமாணம், ரோபணு
காசுதத்மஸி, மித்ரரவி சூர்யபானு கக
பூஷப்யோ நம :
23 ஓம் ஆம், ஹ்ரீம் க்ரோம் ஹ்ரைம்,
ஹ்ரௌம், ஹ்ர : அதோ ஹாரித்ர
வேஷூமே, ஹரிமாணந் நிதத்மஸி,
உதகாதய மாதித்ய: விஸ்வேன ஸஹஸா
ஸஹ, த்விஷந் தம் மம ரந்தயன், மோ
அஹம் த்விஷதோரதம், ஹிரண்ய கர்ப்ப
மரீச்யாதித்ய ஸவித்ரார்க பாஸ்கரேப்யோ நம :
24 ஓம் ஆம், ஹ்ரீம் ஹ்ரைம், ஹ்ரௌம், ஹ்ர :
ஆம், ஹ்ரீம், க்ரோம் ஹ்ரைம், ஹ்ரௌம் : ஹ்ர:
உத்யன்னத்யமித் ரமஹ : ஆரோஹந்
நுத்தராம் திவம் : ஹ்ருத்ரேகம் மமசூர்ய
ஹரிமாணஞ்ச நாஸச ஸூகேஷூமே ஹரிமாணம்
ரோபணு காஸூதத்மஸி அதோ ஹாரித்ர
வேஷூமே
ஹரிமாணம் நிதத்மஸி, உதகாதய மாதித்ய :
விஸ்வேன
மித்ர ரவி சூர்ய-பானுப்யோ நம :
சஹசாசஹ, த்விஷந்தம் மம்ரந்தயன், மேள அஹம்
த்விஷதோ ரதம், மித்ரரவி சூரியபானு கக பூஷ
ஹிரண்ய கர்ப்ப மரீச்யாதித்ய சவித்ரார்க்க
பாஸ்கரேப்யோ நம :

25 ஆதித்யோவா ஏச ஏதன் மண்டலன்
தபதி தத்ரதா ருசஸ்தத்ருசா மண்டலகும்ஷ
ருசாம் லோகோதய ஏஷ ஏதஸ்மின்
மண்டலேர் சிஷி புருஷஸ்தானி யஜுகும்
ஷிஸ் யஜுஷா மண்டலகும்ச யஜுஷாம்
லோகஸ்ஸை ஷாத்ரய்யேவ வித்யாதி யதிய
ஏஷோந் தராதித்ய ஹிரண்மய : புருஷ :
சாயா சம்ஜ்ஞா சமேத ஸ்ரீ சூர்ய
நாராயண ஸ்வாமிநே நம :

26 ஆதித்யோவைதேஜ ஓஜோபலம்
யஸச்சக்ஷு : ச்ரோத்ர மாத்மா மனோ
மன்யுர் மனுர்ம்ருத்யு : சத்யோ மித்ரோ
வாயு ராகாச : ப்ராணோ லோக பால : க :
இங்கன் தத்சத்யமன்ன மம்ருதோ ஜீவோ
விஸ்வ : கதம : ஸ்வயம்பு ப்ரஹ்மை
ததம்ருத ஏஷ புருஷ ஏச பூதானு மதிபதிர்
ப்ரஹ்மண சாயுஜ்யகும்ச லோகதா
மாப்னோ தயேதா ஸாமேவ தேவதானுகும்
சாயுஜ்யகும் சாஷ்டி தாகும் சமான
லோகதா மாப்னோதிய ஏவம் வேத
தியுபநிஷத் சாயா சம்ஜ்ஞா சமேத
ஸ்ரீ சூர்ய நாராயண சுவாமினே நம :

---

## ப்ரார்த்தனை

பாநோ பாஸ்கர மார்த்தாண்ட
சண்டரஸ்மே திவாகர :
ஆயுராரோக்ய மைஸ்வர்யம்
ஸ்ரியம் புத்ராம்ஸ்ச தேஹிமே.
த்ருத பத்ம த்வயம் பானும்
தேஜோ மண்டல மத்யகம்
ஸர்வாதி வ்யாதி ஸமனம்
ஸ்சாயஸ் விஷ்ட தனும் பஜே
சௌரமண்டல மத்யஸ்த்தம்
ஸாம்பம் ஸம்சார பேஷஜம்
நீலக்ரீவம் விருபாக்ஷம்
நமாமி சிவமவ்யயம்
சூர்ய நமஸ்காரம் ஸம்பூர்ணம்

சர்க்கரைப் பொங்கல், ஸவுகரியபடாவிட்டால் அன்னம், பால், வெல்லம் சேர்த்து நைவேத்யம் செய்யலாம்

**கற்பூர ஹாரத்தி**

# சங்கராந்தி பூஜை.

## பூஜைக்கு வேண்டிய சாமான்கள்

[மஞ்சள் பொடி, குங்குமம், சந்தனம், புஷ்பம், அக்ஷதை, புஷ்பமாலை, ஊதுவத்தி, சாம்பிராணி, கற்பூரம் வெற்றிலைப்பாக்கு, வாழைப்பழம், தேங்காய், கரும்பு, மஞ்சள்கொத்து, இஞ்சி கொத்து, சுத்தமான பசும்பால், (காய்ச்சிப் பொங்கிட), வெல்லம் பால் காய்ச்ச பாத்திரம் (அவரவர் வீட்டு ஸம்ப்ரதாயப்படி புதுப்பானைக்கோ அல்லது பாத்திரத்துக்கோ ஸூர்யன், சந்திரனை எழுதியோ அல்லது விபூதிப்பட்டை குங்குமம் இட்டோ தயார் செய்துகொள்ளவேணும்) பஞ்ச பாத்திரத்தில் தீர்த்தம், உத்தரணி, மஞ்சள் பிள்ளையார்.]

## பூஜை ஆரம்பிக்குமுன்

ப்ரஹ்மஸ்ரீ சாஸ்திரிகள் ஒருவரையோ அல்லது ஜோஸ்யரையோ கேட்டு, நல்ல வேளை பார்த்து, அகத்தில் ஸூர்ய கிரணங்கள் விழும் இடத்திலோ அல்லது முற்றத்திலே, இரண்டு அடுப்புகள் மூட்டி ஒன்றில் புதுப் பானையோ அல்லது பாத்திரமோ வைத்துப் பசும்பாலை காய்ச்சிப் பொங்கச்செய்யவேண்டும்; அப்படி பால் பொங்கும்போது "பொங்கலோ பொங்கல்" என்று மூன்று தடைவைகள் ("சர்வே ஜனாஸ்ஸுகினோ பவந்து" என்ற தெய்வீக ப்ரார்த்தனையுடன்) சொல்லவேணும்; பிறகு புது அரிசி கலந்து அந்த பாத்திரத்திலிட்டு பால் சாதம் செய்யவேண்டும்; மற்றொரு பாத்திரத்தில், சர்க்கரைப்பொங்கல் செய்யவேண்டும். இவை இரண்டும் ஆனவுடன், இவ்விரு பாத்திரங்களுக்கும் மஞ்சள் கொத்தும், இஞ்சிக்கொத்தும் கட்டி, அலங்காரம் செய்ய வேண்டும். பிறகு, ஸூர்ய கிரணம் விழுமிடத்தில் வடக்குப் பக்கத்தில் அரிசி மாவால் சூர்யனைப்போல் கோலமும், அருகில் குங்குமத்தால் அர்த்த சந்த்ரனைப்போல் கோலமும் இடவேண்டும்.

## பூஜை

(முதலில் ஆசமனம் செய்யவும். கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக்கொண்டு கீழ்க்கண்ட மந்த்ரம் சொல்லி குட்டிக்கொள்ளவும்.)

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்।
ப்ரஸந்ந வதநம் த்யாயேத் சர்வவிக்நோப சாந்தயே॥
'அயம் முஹூர்த்த: ஸுமுகூர்த்தோஸ்த்விதி பவந்தோ

மஹாந்தோநுக்ருக்ணந்து' என்று ப்ராத்திக்கவும்
அயம் முஹூர்த்தஸ் ஸுமுஹூர்தோஸ்து என்று
ப்ரதிவசனம் சொல்லவும்.

தேதேவ லக்நம் ஸுதிநம் ததேவ
தாரா பலம் சந்த்ர பலம் ததேவ ।
வித்யாபலம் தைவபலம் ததேவ
லக்ஷ்மீபதே தேங்க்ரியுகம் ஸ்மராமி ॥

ஸாவித்ர்யா ருஷி : விஸ்வாமித்ர :

ஓம் தேவீ காயத்ரீ சந்த்: ஸவிதா தேவதா ப்ராண யாமே விநியோக:। ஓம்பூ:— ஓம்புவ:— ஓம்ஸுவ:— ஓம்மஹ:— ஓம்ஜந:— ஓம்தப:— ஓம்ஸத்யம்:— ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் — பர்க்கோ தேவஸ்ய தீமஹி— தியோயோந: ப்ரசோதயாத்— ஓமாப:— ஜ்யோதீரஸ— அம்ருதம் ப்ரஹ்ம— பூர்புவஸ்ஸுவரோம்.

ஓம் ஓம் ஓம்

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம்— சுபே சோபநே முஹூர்தே— ஆத்யப்ரஹ்மண:—த்வீதீய பரார்த்தே—ச்வேத வராஹ கல்பே — வைவஸ்வத மந்வந்தரே — அஷ்டாவிம்சதி தமே கலியுகே — ப்ரதமபாதே — ஜம்பூத்வீபே — பாரத வர்ஷே— பரதகண்டே — மேரோ : தக்ஷிணே பார்ச்வே— சகாப்தே — அஸ்மிந் வர்தமாநே வ்யவஹாரிகே — சாந்த்ரமாநேந ப்ரபவாதீநாம் ஷஷ்ட்யா: ஸம்வத்ஸராணம் மத்யே—......* நாம ஸம்வத்ஸரே— உத்தராயணே— ஹேமந்த ருதௌ— மகரமாஸே— .........* பக்ஷே— ......... சுபதிதௌ... ..* வாஸரயுக்தாயாம் — ......* நக்ஷத்ர யுக்தாயாம் ச் ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதிதௌ — **அஸ்மாகம்** ஸகுடும்பாநும் க்ஷேமஸ்தைர்ய, வீர்யவிஜய ஆயுரோராக்யைச்வர்யா பிவ்ருத்யர்த்தம், தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பல புருஷார்த்த ஸித்யர்த்தம், புத்ரபௌத்ரா பிவ்ருத்த்யர்த்தம், இஷ்ட காம்யார்த்த ஸித்த்யர்த்தம், மநோவாஞ்சா பல ஸித்யர்த்தம், ஸமஸ்த துரிதோப சாந்த்யர்த்தம், லோகே ஸர்வஜன க்ஷேமார்த்தம் ச, ஸ்ரீ சாயாஸம்க்ஞா ஸமேத ஸ்ரீ ஸூர்ய நாராயண ஸ்வாமி ப்ரீத்யர்த்தம், ஸ்ரீ சாயாஸம்க்ஞாஸமேத ஸ்ரீ ஸூர்ய நாராயண ஸ்வாமி பூஜாம் கரிஷ்யே.

ஆதௌ நிர்விக்நேந பரிஸமாப்த்யர்த்தம் கணபதி பூஜாம் கரிஷ்யே:

---

* இக்குறியிட்ட இடங்களைத் தக்கபடி மாற்றிக்கொள்ளவும்.

## கணபதி பூஜை.

(மஞ்சள் பிள்ளையார் செய்து வைத்து, கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக்கொண்டு)

கணநாம் த்வா கணபதிகும் ஹவாமஹே
கவிம் கவீனும் உபமச்ரவஸ்தவம் |
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணும் ப்ரஹ்மணஸ்பதே
ஆநः ச்ருண்வந்நூதிபிஸ்ஸீதஸாதநம் ||
அஸ்மிந் ஹரித்ரா பிம்பே மஹா கணபதிம்த்யாயாமி,
மஹாகணபதிம் ஆவாஹயாமி

| | | | |
|---|---|---|---|
| மஹாகணுதி | பதயே | ஆஸநம் | ஸமர்ப்பயாமி |
| ,, | ,, | அர்க்யம் | ,, |
| ,, | ,, | பாத்யம் | ,, |
| ,, | ,, | ஆசமநீயம் | ,, |
| ,, | ,, | ஔபசாரிகஸ்நாநம் | ,, |
| ,, | ,, | ஸ்நாநாநந்தரம் ஆசமநீயம் | ,, |
| ,, | ,, | வஸ்த்ரார்தம் அக்ஷதான் | ,, |
| ,, | ,, | யக்ஞோபவீதார்த்தம் அக்ஷதான் | ,, |
| ,, | ,; | கந்தான் தாரயாமி | |
| ,, | ,, | கந்தஸ்யோபரி அலங்கரணர்த்தம் அக்ஷதான் ஸமப்பயாமி | |
| ,, | ,, | ஹரித்ரா குங்குமம் | ,, |

புஷ்பை: பூஜயாமி

(புஷ்பம், அஷதையால் மஞ்சள் பிள்ளையாருக்கு பூஜை செய்யவும்)

(1) ஓம் ஸுமுகாய நம: (2) ஓம் ஏகதந்தாய நம: (3) ஓம் கபிலாய நம:, (4) ஓம் கஜகர்ணிகாய நம: (5) ஓம் லம்போதராய நம:, (6) ஓம் விகடாய நம: (7) ஓம் விக்நராஜாய நம: (8) ஓம் கணுதிபாய நம: (9) ஓம் தூமகேதவே நம: (10) ஓம் கணுத்யஷாய நம:, (11) ஓம் பாலசந்த்ராய நம:, (12) ஓம் கஜாநநா நம:, (13) ஓம் வக்ரதுண்டாய நம:, (14) ஓம் சூர்ப்பகர்ணுய நம:, (15) ஓம் ஹேரம்பாய நம: (16) ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:, (17) ஓம் மஹாகணுதிபதயே நம: நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

தூபார்த்தம், தீபார்த்தம் அஷதான் ஸமர்ப்பயாமி
(வெற்றிலை, பாக்கு, பழம், வெல்லம் நிவேதனம் செய்யவேண்டும்.)

ஓம்பூர்புவஸ்ஸுவ : தத்ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோயோந:
ப்ரசோதயாத்—தேவஸவித : ப்ரஸுவ,
ஸத்யம் த்வர்த்தேந பரிஷிஞ்சாமி,

அம்ருதமஸ்து, அம்ருதோபஸ்தரணமஸி ஸ்வாஹா ஓம் ப்ராணாயஸ்வாஹா, ஓம் அபாநாய ஸ்வாஹா, ஓம் வ்யாநாய ஸ்வாஹா, ஓம் உதாநாய ஸ்வாஹா, ஓம் ஸமாநாய ஸ்வாஹா ஓம் ப்ரஹ்மணேஸ்வாஹா,

ப்ரஹ்மணிம ஆத்மாம்ருதத்வாய, மஹாகணதிபதயே
குடகண்ட, கதலீபல நிவேதனம் ஸமர்ப்பயாமி—
மத்யே மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி, தாம்பூலம்
ஸமர்ப்பயாமி கற்பூரம் ஏற்றவேண்டும்.)
நீராஜநம் ஸமர்ப்பயாமி—நீராஜநாநந்தரம்
ஆசமநீயம் ஸமர்ப்பயாமி—

## ப்ரார்த்தனை

வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப।
அவிக்நம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா ॥

(ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்யவும்.)

கணதிபதி ப்ரஸாதம் சிரஸா க்ருஹ்ணாமி

(கணபதி ப்ரஸாதத்தை சிரஸில் தரித்துக்கொள்ள வேணும். பிறகு மஞ்சள் பிள்ளையாரை வடக்கு பக்கமாக நகற்றிவிட வேணும்.)

ததங்கத்வேந கலசபூஜாம் கரிஷ்யே.

(சந்தணம், குங்குமம், அக்ஷதை இவைகளால் கலசத்தை அலங்கரித்து கையால் மூடிக்கொண்டு)

கலசஸ்ய முகே விஷ்ணு : கண்டே ருத்ர : ஸமாச்ருத:।
மூலே தத்ரஸ்திதோ ப்ரஹமா மத்யே மாத்ரு கண
ஸ்ம்ருதா: ॥
குக்ஷௌ து ஸாகரா : ஸர்வே ஸப்தத்வீபா வஸுந்தரா ।
ருக்வேதோऽத யஜுர்வேத: ஸாமவேதோப்யதர்வண: ॥
அங்கைச்ச ஸஹிதா : ஸர்வே கலசாம்புஸமா ச்ரிதா :।
ஆயாந்து தேவ பூஜார்த்தம் துரிதக்ஷயகாரகா : ॥
கங்கே ச யமுநே சைவ கோதாவரி ஸரஸ்வதி ।
தர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மித் ஸந்நிதிம் குரு ॥

(என்று ஜபித்து, கலச தீர்த்தம் சிறிதளவு எடுத்து பூஜா திரவ்யங்களையும் தன்னையும் ப்ரோக்ஷணம் செய்து கொள்ளவேணும் பிறகு, புஷ்பம் அக்ஷதை கையில் எடுத்துக்கொண்டு, கீழ்கண்ட பிரார்த்தனை சொல்லவும்.

## ப்ரார்த்தனை

பாஸ்வாநர்க ஸமிச்ச ரக்தகிரண, ஸிம்ஹாதிப, காஸ்யபோ குர்விந்த்வோச்ச குஜஸ்ய மித்ரமரிக த்ரிஸ்த்த: சுப, பராங்முக சத்ருர் பார்க்கவ சௌரயோ: ப்ரியகுட; காலிங்க தேசாதிபோ

மத்யே வர்த்துலமண்டலே ஸ்திதிமித: குர்யாத் ஸ்தா மங்களம்

(என்று ப்ரார்த்தனை செய்து சூர்யன் சந்திரன் கோலத்துக்குப் பூஜை செய்யவேணும்.)

ஸ்ரீ சாயாஸம்க்ஞாஸமேத சூம்சூர்ய நாராயண ஸ்வாமிதே நம த்யாயாமி

(புஷ்பம் அக்ஷதை சேர்க்கவும்)

,, ஆவாஹயாமி

(புஷ்பம், அக்ஷதை சேர்க்கவும்)

,, ஆஸநம் ஸ்மர்ப்பயாமி

(புஷ்பம் அக்ஷதை சேர்க்கவும்).

ஸ்ரீ சாயாஸம்க்ஞாஸமேத சூம் சூர்ய நாராயணஸ்வாமிதே நம: அர்க்யம்ஸமர்ப்பயாமி

(உத்தரிணியில் தீர்த்தம் எடுத்துவிடவும்).

,, ,, ,, பாத்யம் ஸமர்ப்பயாமி

(உத்தரிணியில் தீர்த்தம் எடுத்து விடவும்).

,, ,, ,, ஆசமநம் ஸமர்ப்பயாமி

(உத்தரிணியில் தீர்த்தம் எடுத்துவிடவும்).

,, சுத்தோதக ஸ்நாநம் ஸமர்ப்பயாமி

(ஒரு உத்தரணியில் தீர்த்தம் எடுத்து, புஷ்பத்தால் சூர்யன், சந்திரன் கோலத்தின்மேல் ப்ரோக்ஷிக்கவும்.)

ஸ்ரீசாயா ஸம்க்ஞாமேத ஸூம் சூர்யநாராயணஸ்வாமிடே நம: வஸ்த்ரயுக்மம் ஸமர்ப்பயாமி

(புஷ்பம், அக்ஷதை சேர்க்கவும்).

,, ,, ,, யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி

(புஷ்பம், அக்ஷதை சேர்க்கவும்)

,, ,, ,, கந்தாந்தாரயாமி

(சந்தணம் சேர்க்கவும்)

,, ,, புஷ்பமாலாம் ஸமர்ப்பயாமி

(புஷ்பம் சேர்க்கவும்).

## அங்க பூஜை

(ஒவ்வொரு நாமாவும் சொல்லி புஷ்பம் அக்ஷதை சேர்க்கவும்,)

ஸ்ரீ சாயாஸம்க்ஞாஸமேத ஸூம் சூர்ய நாராயண ஸ்வாமிநே நம

பாதௌ பூஜயாமி
,, ,, ,, குல்பௌ ,,
,, ,, ,, ஜாநுநீ ,,
,, ,, ,, ஜங்கே ,,
,, ,, ,, ஊரு ,,
,, ,, ,, கடிம் ,,
,, ,, ,, உதரம் ,,
,, ,, ,, நாபிம் ,,
,, ,, ,, ஹ்ருதயம் ,,

ஸ்ரீ சாயாஸம்க்ஞாஸமேத சூம் சூர்ய நாராயண ஸ்வாமிதே நம:

கண்டம் பூஜயாமி
,, ,, ,, ஸ்கந்தௌ ,,
,, ,, ,, ஹஸ்தௌ ,,
,, ,, ,, வக்த்ரம் ,,
,, ,, ,, நேத்ரே ,,
,, ,, ,, கர்ணௌ ,,
,, ,, ,, லலாடம் ,,
,, ,, ,, சிர ,,

ஸ்ரீ சாயாஸ்ம்க்ஞாஸமேத சூம் சூர்ய நாராயணஸ்வாமிநே நம: ஸர்வாண்யங்காநி பூஜயாமி

(பிறகு, கீழ்கண்ட அஷ்டோத்தர சத நாமாவளி பூஜை செய்யவேணும்.)

# ஸூர்யாஷ்டோத்தர சத நாமாவளி:

(இந்த நமக்களுக்கு முன்னால் 'ஓம்' என்றும், பின்னால் 'நம:' என்றும் சேர்த்துச் சொல்லி, அந்தந்த நாமா சொன்னதும் புஷ்பம் அக்ஷதையால் அர்ச்சனை செய்யவும்)

1. அருணாய 2. சரண்யாய 3. கருணாரஸஸிந்தவே 4. அஸமாநபலாய 5. ஆர்த்தரக்ஷகாய 6. ஆதித்யாய 7. ஆதி பூதாய 8. அகிலாகமவேதிநே 9. அச்யுதாய 10. அகிலஞ்ஞாய 11. ஆநந்தாய 12. இநாய 13. விச்வரூபாய 14 இஜ்யாக 15. இந்த்ராய 16. பாதவே 17. இந்திராமந்திராப்தாய 18. வந்தநீயாய 19. ஈசாய 20. ஸுப்ரஸந்நாய 21. சுசீலாய 22. சுவரீச்சஸே 23. வஸுப்ரதாய 24. வஸவே 25. வாஸு தேவாய 26. உஜ்வலாய 27. உக்ரரூபாய 28. ஊர்த்வகாய 29. விவஸ்வதே 30. உத்யத் கிரணஜாலாய 31. ஹ்ருஷீ கேசாய 32. ஊர்ஜஸ்வலாய 33. வீராய 34. நிர்ஜராய 35. ஜயாய 36. ஊருத்வயவிஜர்முக்த நிஜ ஸாரதயே 37: ரிஷிவந்த்யாக 38. ருக்ஹந்த்ரே 39. ரிக்ஷசக்ரசராய 40. ரிஜுஸ்வபாவவித்தாய 41. நிந்யஸ்துத்யாய 42. ரூகார மாத்ருகாவர்ணரூபாய 43. உஜ்வலதேஜஸே 44. ரிக்ஷாதி நாதமித்ராய 45. புஷ்கராக்ஷாய 46. துப்பதந்தாய 47. சாந் தாய 48. காந்திதாய 49. கநாய 50. சுநத்சுநகபூஷணாய 51. கத்யோதாய 52, லூநிதாகிலதைத்யாய 53. ஸத்யாநந்த ஸ்வரூபிணே 54. அலவர்க்கப்ரதாப 55. ஆர்த்தசரண்யாய 56. ஏகாகிநே 57. பகவதே 58. ஸ்ருஷ்டிஸ்த்தித்யந்தகா ரிணே 59. குணாத்மநே. 60. க்ருணிப்ருதே 61. ப்ருஹதே 62. ப்ரஹ்மணே 63. ஐசவர்யதாய 64. சர்வாய 65. ஹரித ச்வாய 66. ஸௌரயே 67. தசதிக்ஸம்ப்ரகாசாய 68. பக்தவ ச்யாய 69. ஓஜஸ்கராய 70. ஜயிநே 71. ஜகதாநந்தஹேதவே 72. ஜந்மம்ருத்யுஜரா வ்யாதிவர்ஜிதாய 73. ஔந்தத்யபந ஸஞ்சாராதஸ்த்தாய 74. அஸுராரயே 75. கமநீயகராய 76. அப்ஜவல்லபாய 77. அந்தர்பஹி ப்ரகாசாய 78. அசிந் த்யாய 79. ஆத்மரூபிணே 80. அச்யுதாய 31. அமரேசாய 82. பரஸ்மை ஜ்யோதிஸே 83. அஹஸ்கராய 84. ரவயே 85. ஹரயே 86. பரமாத்மதே 87. தருணாய 88. வரேண்யாய 89. க்ரஹாணாம்பதயே 90. பாஸ்கராய 91. ஆதிமத்யாந்தர ஹிதாய 92. ஸௌக்யப்ரதாய 93. ஸகலஜகதாம்பதயே 94. ஸூர்யாக 95. கவயே 96. நாராயணாய 97. பரேசாய 98. தேஜோரூபாய 99. ஸ்ரீம் ஹிரண்யகர்ப்பாய 100. ஹ்ரீம் ஸம்பத்கராய 191. ஐம் இஷ்டார்த்ததாய 102. அம் ஸுப்ர

ஸத்நாய 103. ஸ்ரீமதே 104. ச்ரேயஸே 105. ஸௌக்ய தாயிதே 106. தீப்தமூர்த்தயே 107. நிகிலாகமவேத்யாய 108. நித்தியநந்தாய.

ஸ்ரீசாயா ஸம்க்ஞா ஸமேத ஸ்ரீசூர்ய நாராயணஸ்வாமிநே நம:। நாநாவித பரிமள பத்ரபுஸ்பாணி ஸமர்ப்பயாமி.

# விவசாயிகளுக்கு

பொங்கல் தினம். விவசாயிகளுக்கும் பொன்னான நாள்: புதுவருஷம் ஆரம்பம்போலனாது. நிலத்தில் புதிதாக சாகுபடி செய்யப்பட்ட நெல்லை அரைத்து அந்த அரிசியை பால்விட்டுப் பொங்கச் செய்கிறார்கள். 'நிலம்' ஸ்ரீ பூமாதேவியின் அம்சமானதால், "ஸ்ரீ பூமாதேவியின்" ஸ்தோரம் அடிக்கடி சொல்வதால், விவசாயம் விருத்தியடைந்து, ஸகல மங்களங்களும் உண்டாகும். ஸ்ரீ பூமிதேவி விஷயமாக ஸ்ரீமத் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்துள்ள பின்வரும் ஸ்லோகங்களை அநுஸந்தித்து, ஆல்போல் தழைத்து, அரசுபோல் உயர்ந்து பன்னாள் வாழ்ந்திட ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்ய வர்யோ மேஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ஸங்கல்ப கல்ப லதிகா மவதிம் க்ஷமாயா ।
ஸ்வேச்சா வராஹமஹிஷீம் ஸுலபாநுகம்பாம் ।
விச்வஸ்ய மாதர மகிஞ்சந காமதேநும்
விச்வம்பராமசரண: சரணம் ப்ரபத்யே ॥
பத்யுர்தக்ஷிண பாணியங்கஜபுடே விந்யஸ்த பாதாம்புஜா
வாமம்பந்நக ஸார்வபௌம ஸத்ருசம் பர்யங்கயந்தீ புஜம் ।
போத்ர ஸ்பர்ச லஸத் கபோல பலகா புல்லார விந்தேக்ஷணா
ஸாமே புஷ்யது மங்களாந்யநுதிநம் ஸர்வாணி ஸர்வம்ஸஹா ॥

அஸ்யே சாநா ஜகத இதி யா ச்ருயதே விஷ்ணுபத்நீ
தஸ்யா: ஸ்தோத்ரம் விரசிதமிதம் வேங்கடேசேத பக்த்யா।
ச்ரத்தா பக்தி ப்ரசய குருணா சேதஸா ஸம்ஸ்துவாந:
யத் யத் காம்யம் ஸபதி லபதே தத்ர தத்ர ப்ரதிஷ்டாம் ॥
கவிதார்க்கிக ஸிம்காய கல்யாண குணசாலிநே ॥
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ॥

## தூபம்

தசாங்கம் குக்குலூபேதம் ஸுகந்தம் ச மநோஹரம் ।
தூபம் தாஸ்யாமி தேவேச க்ருஹாண த்வம் திவாகர ॥
தூபமாக்ராபயாமி
ஸாஜ்யம் த்ரிவர்தி ஸம்யுக்தம் வஹ்நிநா யோஜிதம் மயா ।
க்ருஹாண மங்களம் தீபம் ஸ்ரீ ஸூர்யநாராயண நமோஸ்துதே ॥
தீபம் தர்சயாமி

(தரையில் தீர்த்தம் தெளித்து சுத்தம் செய்து நைவேத்யங்களை ஸமர்ப்பித்து (கரும்பு உள்பட) கீழ்கண்டபடி நிவேதநம் செய்யவேண்டும்.)

''ஓம் பூர் புவஸ்ஸுவ:'' 7-ஆம் பக்கத்திலிருந்து ''ப்ரஹ்மணே ஸ்வாஹா'' வரை சொல்லவேண்டும்.) பிறகு ஸ்ரீ சாயாஸம்க்ஞாஸமேத ஸூர்யநாராயணஸ்வாமிநே நம:; சால்யந்நம், க்ருதகுள பாயஸம், இக்ஷுதண்டம் மாஷாபூபம், குளாபூபம், லட்டுகம், நாரிகேள கண்டம், கதளீபலம், மஹா நைவேத்யம் நிவேதயாமி—மத்யே மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி.

நைவேத்யாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
பூகீபல ஸமாயுக்தம் நாகவல்லி தளைர்யுதம் ।
கர்ப்பூர சூர்ண ஸம்புக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥
தாம்பூலம் ஸமர்ப்பயாமி
ஸ்ரீசாயா ஸம்க்ஞாஸமேத ஸ்ரீ ஸூர்ய நாரரயண ஸ்வாமிநே நம:
ஸ்வர்ண புஷ்பம் ஸமர்ப்பயாமி
க்ருதவர்த்தி ஸஹஸ்ரைச்ச கற்பூர சகலைஸ் ததா:
நீராஜநம் மயாதத்தம் க்ருஹாண வரதோ பவ ॥
ஸ்ரீசாயா ஸம்க்ஞாஸமேத ஸ்ரீ ஸூர்ய நாராயண ஸ்வாமிநே நம:
கர்ப்பூர நீராஜநம் தர்சயாமி
நீராஜநாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி

(கீழ்கண்ட ச்லோகங்கள் சொல்லி ப்ரதக்ஷிணம் செய்து, நமஸ்காரம் செய்யவும்.)

யாநி காநி ச பாபாநி ஜன்மாந்த்ர க்ருதாநிச ।
தாநி தாநி விநச்யந்தி ப்ரதக்ஷிணபதே பதே ॥
ப்ரக்ருஷ்ட பாப நாசாய ப்ரக்ருஷ்ட பலஸித்தயே ।
ப்ரதக்ஷிணம் கரோமி த்வாம் ஜயோதீரூப திவாகர
நக்ஷத்ரக்ர ஹதாராணும் அதிபோ விச்வபாவந ।
தேஜஸாமபி தேஜஸ்வீ த்வாத சாத்மன் நமோஸ்து தே ॥
நம: பூர்வாய கிரயே பச்சிமாய அத்ரயே நம: ।
ஜ்யோதிர்கணும் பதயே திநாதிபதயே நம: ।
ஜயாய ஜயபத்ராய ஹர்யச்வாய நமோ நம: ।
நமோநம: ஸஹஸ்ராம்சோ ஆதித்யாய நமோ நம: ॥
நம உக்ராய வீராய ஸாரங்காய நமோ நம: ।
நம: பத்மப்ர போதாய ப்ரசண்டாய நமோ நம: ॥

ப்ரம்மேசா நாச்யுதேசாய ஸௌர்யாய ஆதித்யவர்ச்சஸே ।
பாஸ்வதே ஸர்வபக்ஷாய ரௌத்ராய வபுஷே நம: ॥
தாமோக்னய ஹிமக்னய சத்ருக்னய அமிதாத்மநே ।
க்ருதக்னக்னய தேவாய ஜ்யோதிஷாம் பதயே நம: ॥

## ப்ரார்த்தனே

பானோ பாஸ்கர மார்த்தாண்ட சண்ட ரச்மே திவாகர ।
ஆயுராரோக்ய மைச்வர்யம் ச்ரியம் புத்ராந்ச தேஹிமே ॥
ஸ்ரீ சாயாஸம்க்ஞா ஸமேத ஸ்ரீ ஸௌர்ய நாராயண ஸ்வாமிநே நம:
ஸமஸ்த ராஜோபசார ஷோடசோபசார பூஜா: ஸமர்ப்பயாமி

(புஷ்பம், அக்ஷதை சேர்க்கவும்)

(கீழ்க்கண்ட மந்தரம் சொல்லி, அக்ஷதையைத் தீர்த்தத்துடன் பூமியில் விடவும்.)

காயேந வாசா மநஸேந்த்ரியைர்வா
புத்யாத்மநா வா ப்ரக்ருதே: ஸ்வபாவாத் ।
கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை
நாராயணுயேதி ஸமர்ப்பயாமி ॥

அநயா பூஜயா ஸ்ரீ சாயாஸம்க்ஞாஸமேத ஸ்ரீ ஸௌர்ய நாராயணஸ்வாமீ ப்ரீயதாம்.
ஸ்ரீ சாயாஸம்க்ஞாஸமேத ஸ்ரீ ஸௌர்ய நாராயணம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி

(என்று சொல்லி உத்வாஸநம் செய்யவும்.)

# மாட்டுப்பொங்கல்

## பூஜைக்கு வேண்டிய சாமான்கள்

[மஞ்சள் பொடி, குங்குமம், சந்தனம், புஷ்பம், அக்ஷதை, புஷ்பமாலே, ஊதுவத்தி, சாம்ப்ராணி, கற்பூரம், வெற்றிலேப் பாக்கு, வாழைப்பழம் மஞ்சள் கொத்து, சுத்தமான பசும்பால் கொஞ்சம், பொங்கலிட அரிசி, வெல்லம்.]

மாட்டுப்பொங்கலன்று மாட்டுக்கொட்டிலே நன்ருக அலம்பி, சுத்தம் செய்து, கோலம் இட்டு: தோரணங்களால் அலங்கரிக்க வேணும். மாலே, பசுக்களேயும், எருதுகளேயும், கன்றுகளேயும் நன்ருகக் குளிப்பாட்டி, மஞ்சள் குங்குமம் இட்டு, கொம்புகளுக்கு வர்ணங்கள் தடவி, புஷ்பங்களாலும், மாங்கொத்துகளாலும் அலங்காரம் செய்ய வேண்டும். கொம்புகளுக்கு புது வஸ்திரங்

கள் அணிவிப்பதும் உண்டு. மாலை நல்லவேளை பார்த்து மாட்டுக்கொட்டிலில் அடுப்பு மூட்டி, புதுப் பானைவைத்து ஜலத்துடன் கொஞ்சம் பால் சேர்த்து உலைவைக்க வேணும். பிறகு புது அரிசி களைந்து பானையிலிட்டு பொங்கும்போது ''பொங்கலோ பொங்கல்'' என்று ஆரவாரம் செய்யவேணும். சாதம் பக்குவமானதும், பானையை அடுப்பிலிருந்து இறக்கி, மஞ்சள்கொத்து முதலியவைகளால் அலங்காரம் செய்யவேணும். அதில் வாழைப்பழங்கள் உரித்துப்போட்டு, வெல்லமும் சேர்க்க வேணும். மாடுகளையும், கன்றுகளையும் கொட்டிலுக்கு அழைத்து வந்து, நிறைய சாம்பிராணி தூபம் போட்டு மாடுகளுக்குக் காண்பிக்கவும். பிறகு கற்பூரம் ஏற்றி மாடுகளை ப்ரதக்ஷணமாக வரவும். எருதுகளை நந்தி கேச்வரராக பாவிக்கவும். பசுக்களை கோமாதாவாக த்யானித்து கீழ்க்கண்ட ச்லோகம் சொல்லி நமஸ்காரம் செய்யவும் :

காவ : ப்ரதிஷ்டா பூதாநாம் ததா காவ : பராயணம்।

காவ: புண்யா: பவித்ராச்ச கோதநம் பாவநம் ததா॥

(அதாவது பசுக்களே ப்ராணிகளுக்கு ஆதாரம்: பசுக்களே சரணமடையத் தக்கவை; பசுக்களே புண்ணியமும் சுத்தமுமானவை; பசுக்களாகிற தனம் புண்ணியமான தனமாகும்.)

பிறகு, பழத்துடனும், வெல்லத்துடனும் சேர்க்கப் பட்ட பால் அன்னத்தை எல்லா மாடுகளுக்கும் தர வேண்டும்.

## மூன்றும் நாள் மாட்டுப்பொங்கல்.

சதுர் மறை ஆரியம் வருமுன்
  சக முழுதும் நினதானல்
முது மொழி நீ அனுதியென
  மொழிகுவதும் வியப்பாமே !! என்று
மனோன் மணீயம் பாடிற்று.

அந்நாளில் கங்கை நாட்டிலும்; காவேரி நாட்டிலும் தாளான்மையுடைய தமிழர் வேளாண்மைசெய்தனர்.

கங்கைத் திருநாட்டில் பயிர்த்தொழில் செய்த வேளாளர் இன்றும் தமிழகத்தில் கங்கை குலத்தவர் என்று கருதப்படுகிருர்கள்.

திருஞான சம்பந்தர் ''வாழ்க ஆனினம்'' என்று போற்றினர்.

ஆ என்ருல் பசு என்று பொருள். ஆதிச் செல்வமாகிய ஆ – பசு. பலவகைச் செல்வங்கட்கும் மூலமான மாடு பசுவை குறிக்குங்கால் ''ப சு ம ா டு'' என்றும் எருதைக் குறிக்குங்கால் எருத்தமாடு. பசு இன்றேல் உழ இன்ற எருது இன்று எருது இன்றேல் பயிர் இன்று. பயிர் இன்றேல் விளை பொருளின்று. மிளிரும் பிற செல்வமுமின்று. இப்படிச் செல்வங்களை யெல்லாம் வழங்குகின்ற மாட்டினை செல்வத்தை ஆவினைப் போற்றி வழி படலாகாதா?

''மாட்டுப் பெண் சேர்தலும்
மாடு சேர்தலும் மகிமையுடையோருக்கே''!!

இல்லறம் நடத்தற்கு முக்கிய ஊன்று கோலாக இயங்கி வருவது '' ஆ '' வினமாகும்.

ஏனெனில் ந ம து உழைப்பில் ஆண்வர்க்கம் முக்கியப் பங்கேற்று உதவுவதோடு பெண் வர்க்கம் அமுதமே ஈந்து நம் உயிர்களைக் காத்து நலம் பேணும் உயிர் சஞ்சீவியாகவும் அமைந்துள்ளது, எனினும் அக் கோவினத்திற்கு ஆண்டில் ஒரு நாளாவது ஓய்வு கொடுத்து குதூகலப்படுத்துவதும் நமதுகடமையல்லவா?

பசுக்களின் தேகத்தில் ஒவ்வொரு அங்கத்திலும் ஒவ்வொரு தேவதை இருப்பதாக புராணங்களில் உள்ளதினுல் ஆதிச்செல்வமாகிய ஆ-பசு பூலோக காமதேனு என்றும் பெயர் வழங்கிவருகிறது.

'' பசு கரத்தல் பெரும் புண்ணியம் யாவர்க்குமாம்
பசுவிற்கும் ஒரு வாயுறை என்பது

திரு மூலர் திருவாக்கு.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு பசுகாத்த கோபாலன் என்ற திருநாமமும் வளங்கியது. '' கோ '' என்ற வார்த்தைக்கே மோட்சம், சுடர், பூமி என்றுள்ளது.

பசு ஓர் வரப்பிரசாதம். இதிலிருந்து வரும் எல்லாப்பொருள்களும் மனித வர்க்கத்துக்கு பிரயோஜன படக்கூடியது. இது உட்கொள்ளும் பொருளோ புல்லு, வைக்கோல், தவிடு, பிண்ணுக்கு, பருத்திவிதை. நமக்குப் பசு அளிப்பதோ புஷ்ட்டியைத்தரும் பால். குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் உணவுப்பொருள்.

**கோஜலம்**: சாஸ்திர ரீதியாகவும், வைத்திய ரீதியாகவும் உபயோகப்படுவது.

**கோமயம்**: சாணத்தைக்கொண்டு சுத்தி செய்தல், உலர்ந்த பிறகு எரிபொருளாகவும், திருநீருகவும் (விபூதியாகவும்) உபயோகப்பட உதவுகிறது. கடைசியாக பயிர்களுக்கு உரம் உணவாகவும் பயன்படுகிறது.

ஒரு பசு குறைந்தது 15 அல்லது 16 வருஷம் இவ்வுலகத்தில் ஜீவித்திருக்கக்கூடியது. இதன் கன்றும் பசுவாகி சத்துள்ள பாலைத்தரும். இப்படியாக பல ஆயிரக்கணக்கான மானிட ஜீவன்களுக்கு தினத்திற்கான பாலைத்தந்து கொண்டிருக்கிறது.

காவ: ப்ரதிஷ்டா பூதா நாம்
தாதா காவ: பராயணம்.
காவ: புண்யா: பிவித்ராஸ்ச கோதநம்-
பாவநம் ததா!!

(பொருள்) ப்ராணிகளுக்கெல்லாம் ஆதாரம் பசு. பசுக்கள் சுத்தமும் புண்ணியமும் கொண்டது. பசுக்களாகிற தனம் புண்ணியமான தனமும் தானமுமாகும்.

மாட்டுப்பொங்கலன்று மாட்டுக்கொட்டிலில் உருட்டி வைக்கப்பட்ட மாட்டுச் சானத்தின்பேரில் அருகம்புல் செறுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அதன் முன்னிலையில் பொங்கலைப் படைக்கிறோம். அந்தச் சாணி உருண்டையே கோவர்த்தனப்பர்வதம். அவ்வருகம் புல்லே அம்மலையின் மேல் மிளிரும் மேய்ச்சல் தரை. நமது கொட்டிலிலுள்ள ஆனினங்களெல்லாம் கண்ணபிரானுடைய பசுக்கள். அன்று, பின்னர் நாம் பசு மஞ்சளில் ஆவாகனம் செய்து வழிபடும் பூஜை, கண்ணபிரான் தேவேந்திரனை மன்னித்து அனுமதி கொடுத்த தேவேந்திர பூஜை.

## நான்காம்நாள் "கன்னிப் பொங்கல்"

நம்நாட்டில் எல்லா பெண்களும் தம் உடன் பிறந்தாரின் க்ஷேமத்தை கருதி நோற்கும் நோன்பு "கனு நோன்பு." அன்று எல்லாப் பெண்களுக்கும் உடன் பிறந்தார் பொருளனுப்பித் தங்கட்காக அவர்கள் செய்யும் நோன்பைத் தங்கள் பொருளாலேயே நடத்தி வைப்பது நம் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு நடந்துவரும் பழக்கம்,

கனிநாள் என்பது "உவப்புறுநாள்" வழிபாடு விழாவினால் உண்டான உவப்பின் காரணமாகத் திருக்கோயில் சென்று இறைவனைக் கண்டு வழிபடுதல். இதில் சில இனத்தினர் பெண்கள் கூட்டமாககூடி, கும்மி, கோலாட்டம் போட்டுக் கொண்டு ஆத்தங்கரையில் கூட்டுப் பொங்கல் செய்து, நவ கன்னிகைகளை கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி (கன்னி) நர்மதை, துங்கபத்ரி சரபுவழி பட்டு மாலைப்பொழுதில் வீடு திரும்புவார்கள்.

இந்நவ கன்னிகைகளின் விக்கிரஹத்தை கும்பகோணம் மகாமகம் குளம் காசிவிஸ்வேஸ்வரர் ஆலயத்தில் காணலாம். "திருநாவுக்கரசு அடிகளார் நவகன்னிகைகளை கீழ்கண்டவாறு வர்ணித்துள்ளார்.

"நங்கை யாளுமை யாளுறை நாதனுர்
அங்கையாளொ டறுபதந் தாழ்சடைக்
கங்கை யாளவன் கன்னி யெனப்படும்
கொங்கையாள் உறை யுங்குட மூக்கிலே"

"ஓதா நாவன் திறத்தை உரைத்திரேல்
ஏதா னும்மினிதாகும் மியமுனை
சேதா ஏறுடையான் அமர்ந்த விடம்
கோதா விரியுறை யுங்குட மூக்கிலே"

"காமியஞ் செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத்துணர் மீனே
சாமியோடு சரசுவதி யவள்
கோமியும் உறையுங்குட மூக்கிலே"

"ஏவியிடர்க் கடலிடைப் பட்டிணைக்கின்றேனை
இப் பிறவி யறுத் தேறவாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்தும் உருவிப் போகக்
குறியல்அறு குணத்தாண்டு கொண்டார் போலும்."

"தாவி முதல் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதி பொற்றுமரைபுட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத் தெங்கூத்தனுரே".

அன்று காலை சுமங்லிகள் பெரிய சுமங்கலிகளிடம் புதிய மஞ்சளைக் கொடுத்து, ஆசீர்வாதம் பெற்று, மஞ்சளன்னம் முதலிய சித்ர அன்னத்தை தீர்த்தக் கரையில் அல்லது வீட்டு முத்தம், மாடி, திறந்தவெளியில் மஞ்சள் இலையின் மீது பிடிபிடியாக வைத்துத் தனது ஸஹோதரர் விடு நன்கு வாழவேண்டும் எனப் பிரார்த்திப்பார்கள். யமதர்மராஜன் காக்கை வேஷம் தரித்ததால் காக்கைக்கு அன்னமிட்டால் அவர் சந்தோஷமடைந்து அருள்புரிவார். ஆதலால் பிரதி தினமும் வைச்(ஸ்)வதேவம் என்றகர்மாவிலும், சிராத்தத்திலும் காக்கைக்கு அன்னமிடப்படுகிறது.

உ

ஓம் சக்தி

**மீனுக்ஷி இராமன் (ஸ்வாமி)**
**C/o. ராணி பர்னிச்சர்**
**21, மேல ஆவணி மூலவீதி, மதுரை - 625001**

***பேரன்புடைய பக்தர்களுக்கு!***

பேரன்புடைய பக்தர்களுக்கு, விஞ்ஞாபனம். இளம் சந்ததியர்களின் முன்னேற்றத்தைக் கருதி, குடும்பத்தினர் அனைவரும் தாமே பூஜைகள் செய்து கொள்ளும்படி ஸமஸ்கிருத, க்ரந்தத்திலும் உள்ளதை தமிழில் 1. ப்ரபஞ்ச தோற்றமும், காலத்துவம். 2 ஆலய வழிபாடு. 3. நவக்கிரகங்கள் உற்பத்தி 4. ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம், பூஜை விதி. 5. ஸ்ராவனம். 6. ஸ்ரீ ஜெயந்தி 7. சாமியே சரணம். 8. கணபதி பூஜா்விதி. 9. ஜெகந்நாத பெருமாள். 10. நவ்ராத்திரி பாராயணம். 11. ஓம் சக்தி தசரா 12. தீபாவளி, கார்த்திகை வரலாறு 13. ஆருத்ரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி 14. விஷ்ணு ஸஹஸ்ர நாம சித்ரா ஆலய கோலம். 15. மஹாளயம் போன்ற இலவச தமிழ் வெளியீடுகளை ஒரு சில்லரைத்தவிர மற்ற அனைவருமே அனைத்து புத்தகங்களையும் பெற்றிருக்கலாம். இதைத்தவிர சிவராத்திரியும், சிவலிங்க வழிபாடும், 2. தைப்பொங்கல் என்ற இரண்டு வெளியீடுகளுடன் இவ்விலவச வெளியீடுகள் முடிவடைகின்றன. அவை ஆண்டு முதல் தினங்களில் ஆரம்பித்து மாசிமாதம் சிவராத்திரியுடன் சிவ சிவ என்று முடிகிறது.

இவைகள் எல்லாம் சேர்ந்து 1,80,000 பிரதிகள் அச்சிட்டு பல மாகாணங்களுக்கும், வெளிநாட்டு தமிழர் களுக்கும் அவர்களின் விருப்பப்படி அனுப்பப்பட்டுள்ளது. இது தவிர அடியேன் யாத்திரையின்போது பல ஸ்தலங் களிலும் விநியோகிக்கப்பட்டது. பல பக்தர்கள் இப் பணியைதொடர்ந்து நடத்தும்படியும் முன்னைய நூல்கள் மீண்டும் சில பிரதிகள் வெளியிடும்படி வேண்டியுள்ளனர்.

ஆனல் தற்சமயம் உள்ள கால நிலையில் சிறிது யோசிக்கும்படி உள்ளது. வெளியீடுகளில் பதிப்புரிமை இல்லை. யாரும் அச்சிடலாம். ஆனல் இதுவரை யாரும் முன்வரவில்லை. ஆனல் அடியேன் ஆதிபராசக்தியின் அருள் இருக்கும்வரை என்னல் முடிந்த அளவு பணிசெய்ய கடமைப்பட்டவன். பக்தர்கள் ஊக்கம் அளித்தால் இப்பணியை தொடர்ந்து செய்ய தயாராக இருக்கிறேன். அடியேனைக்காட்டிலும் பக்த அறிவுமிக்கவர்கள் வெளியிட்ட பலநூல்கள் விலை கொடுத்து வாங்க பலரால் இயலவில்லை. இவர்களின் கஷ்டத்தை எண்ணி அறியமுடியாத அபூர்வ அறிவை இளம் சந்ததியர்க்கு அளிக்க பல பக்தர்களின் வேண்டுகோள்படி இன்னும் பல நூல்களும் வெளியிட பல வசதியுள்ள பக்தர்கள் உதவிட முன்வந்தால், என்னல் முடியும்.

ஞான பிரகடனம் விக்ஞான நௌகா

அறிவுக் கப்பல்

என்கிற திருநாமத்துடன் வெளியிடுவதாக உத்தேசம்,

நம் ஹிந்து மதத்திற்கு ஞான பிரகடனம் செய்தவர் வேதவியாசர். இவரிலிருந்து ஆச்சார்யார்கள் இவர்களுடைய பரம்பரைகள் நாயன்மார்கள், வர்கங்கள் வேறுபாடு இல்லாமல் வெளியீட்டில் தத்துவங்கள் இருக்கும். இப்பிரதிகள் ஆண்டில் சுமார் 20 முதல் 25 வரை வெளியிட மதிப்பிட்டுள்ளேன். இந்த பணியில் பக்தர்கள் தங்களுடைய இளம் சந்ததிகள் உத்தேசித்தும் மற்றும் உறவினர்கள் வேண்டியவர்கள் சந்ததிகளையும் உத்தேசித்து அவர்களுடைய நற்பயன்களுக்காகவும் இவ்விதழ்கள் தவருமல் பெறவேண்டியவர்கள் தங்களால் முடிந்த சக்திக்கு நன்கொடை அனுப்பி தங்களுடைய பெயர்கள் பதிவு செய்துகொள்ளலாம்.

ஓம் சக்தி — சக்தி சிவம்.

குணமும் — மணமும்

தர்மம் வாழி! தார்மிகர் வாழி! தார்மிக பத்திரிகைவாழி!

ஓம் சக்தி

**மீனாக்ஷி இராமன் (ஸ்வாமி)**
**C/o. ராணி பர்னிச்சர்**
**21, மேல ஆவணி மூலவீதி, மதுரை - 625001**

***பேரன்புடைய பக்தர்களுக்கு!***

பேரன்புடைய பக்தர்களுக்கு, விஞ்ஞாபனம். இளம் சந்ததியர்களின் முன்னேற்றத்தைக் கருதி, குடும்பத்தினர் அனைவரும் தாமே பூஜைகள் செய்து கொள்ளும்படி ஸமஸ்கிருத, க்ரந்தத்திலும் உள்ளதை தமிழில் 1. ப்ரபஞ்ச தோற்றமும், காலத்துவம். 2 ஆலய வழிபாடு. 3. நவக்கிரகங்கள் உற்பத்தி 4. ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம், பூஜை விதி. 5. ஸ்ராவனம். 6. ஸ்ரீ ஜெயந்தி 7. சாமியே சரணம். 8. கணபதி பூஜாவிதி. 9. ஜெகந்நாத பெருமாள். 10. நவராத்திரி பாராயணம். 11. ஓம் சக்தி தசரா 12. தீபாவளி, கார்த்திகை வரலாறு 13. ஆருத்ரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி 14. விஷ்ணு ஸஹஸ்ர நாம சித்ரா ஆலய கோலம். 15. மஹாளயம் போன்ற இலவச தமிழ் வெளியீடுகளை ஒரு சிலரைத்தவிர மற்ற அனைவருமே அனைத்து புத்தகங்களையும் பெற்றிருக்கலாம். இதைத்தவிர சிவராத்திரியும், சிவலிங்க வழிபாடும், 2. தைப்பொங்கல் என்ற இரண்டு வெளியீடுகளுடன் இவ்விலவச வெளியீடுகள் முடிவடைகின்றன. அவை ஆண்டு முதல் தினங்களில் ஆரம்பித்து மாசிமாதம் சிவராத்திரியுடன் சிவ சிவ என்று முடிகிறது.

இவைகள் எல்லாம் சேர்ந்து 1,80,000 பிரதிகள் அச்சிட்டு பல மாகாணங்களுக்கும், வெளிநாட்டு தமிழர்களுக்கும் அவர்களின்விருப்பப்படி அனுப்பப்பட்டுள்ளது. இது தவிர அடியேன் யாத்திரையின்போது பல ஸ்தலங்களிலும் விநியோகிக்கப்பட்டது. பல பக்தர்கள் இப்பணியைதொடர்ந்து நடத்தும்படியும் முன்னைய நூல்கள் மீண்டும் சில பிரதிகள் வெளியிடும்படி வேண்டியுள்ளனர்.

ஆனால் தற்சமயம் உள்ள கால நிலையில் சிறிது யோசிக்கும்படி உள்ளது. வெளியீடுகளில் பதிப்புரிமை இல்லை. யாரும் அச்சிடலாம். ஆனால் இதுவரை யாரும் முன் வரவில்லை. ஆனால் அடியேன் ஆதிபராசக்தியின் அருள் இருக்கும்வரை என்னால் முடிந்த அளவு பணிசெய்ய கடமைப்பட்டவன். பக்தர்கள் ஊக்கம் அளித்தால் இப் பணியை தொடர்ந்து செய்ய தயாராக இருக்கிறேன். அடியேனைக்காட்டிலும் பக்த அறிவுமிக்கவர்கள் வெளியிட்ட பல நூல்கள் விலை கொடுத்து வாங்க பலரால் இயலவில்லை. இவர்களின் கஷ்டத்தை எண்ணி அறியமுடியாத அபூர்வ அறிவை இளம் சந்ததியர்க்கு அளிக்க பல பக்தர்களின் வேண்டுகோள்படி இன்னும் பல நூல்களும் வெளியிட பல வசதியுள்ள பக்தர்கள் உதவிட முன்வந்தால், என்னால் முடியும்.

ஞான பிரகடனம் விக்ஞான நௌகா

அறிவுக் கப்பல்

என்கிற திருநாமத்துடன் வெளியிடுவதாக உத்தேசம்,

நம் ஹிந்து மதத்திற்கு ஞான பிரகடனம் செய்தவர் வேதவியாசர். இவரிலிருந்து ஆச்சார்யார்கள்இவர்களுடைய பரம்பரைகள் நாயன்மார்கள், வர்கங்கள் வேறுபாடு இல்லாமல் வெளியீட்டில் தத்துவங்கள் இருக்கும். இப்பிரதிகள் ஆண்டில் சுமார் 20 முதல் 25 வரை வெளியிட மதிப்பிட்டுள்ளேன். இந்த பணியில் பக்தர்கள் தங்களுடைய இளம் சந்ததிகள் உத்தேசித்தும் மற்றும் உறவினர்கள் வேண்டியவர்கள் சந்ததிகளையும் உத்தேசித்து அவர்களுடைய நற்பயன்களுக்காகவும் இவ்விதழ்கள் தவறுமல் பெறவேண்டியவர்கள் தங்களால் முடிந்த சக்திக்கு நன்கொடை அனுப்பி தங்களுடைய பெயர்கள் பதிவு செய்துகொள்ளலாம்.

ஓம் சக்தி — சக்தி சிவம்.

குணமும் — மணமும்

தர்மம் வாழி! தார்மிகர் வாழி! தார்மிக பத்திரிகைவாழி!

ஓம் சக்தி

**மீனுக்ஷி இராமன் (ஸ்வாமி)**
**C/o. ராணி பர்னிச்சர்**
**21, மேல ஆவணி மூலவீதி, மதுரை - 625001**

***பேரன்புடைய பக்தர்களுக்கு!***

பேரன்புடைய பக்தர்களுக்கு, விஞ்ஞாபனம். இளம் சந்ததியர்களின் முன்னேற்றத்தைக் கருதி, குடும்பத்தினர் அனைவரும் தாமே பூஜைகள் செய்து கொள்ளும்படி ஸமஸ்கிருத, க்ரந்தத்திலும் உள்ளதை தமிழில் 1. ப்ரபஞ்ச தோற்றமும், காலத்துவம். 2 ஆலய வழிபாடு. 3. நவக்கிரகங்கள் உற்பத்தி 4. ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம், பூஜை விதி. 5. ஸ்ராவனம். 6. ஸ்ரீ ஜெயந்தி 7. சாமியே சரணம். 8. கணபதி பூஜாவிதி. 9. ஜெகந்நாத பெருமாள். 10. நவராத்திரி பாராயணம். 11. ஓம் சக்தி தசரா 12. தீபாவளி, கார்த்திகை வரலாறு 13. ஆருத்ரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி 14. விஷ்ணு ஸஹஸ்ர நாம சித்ரா ஆலய கோலம். 15. மஹாளயம் போன்ற இலவச தமிழ் வெளியீடுகளை ஒரு சிலரைத்தவிர மற்ற அனைவருமே அனைத்து புத்தகங்களையும் பெற்றிருக்கலாம். இதைத்தவிர சிவராத்திரியும், சிவலிங்க வழிபாடும், 2. தைப்பொங்கல் என்ற இரண்டு வெளியீடுகளுடன் இவ்விலவச வெளியீடுகள் முடிவடைகின்றன. அவை ஆண்டு முதல் தினங்களில் ஆரம்பித்து மாசிமாதம் சிவராத்திரியுடன் சிவ சிவ என்று முடிகிறது.

இவைகள் எல்லாம் சேர்ந்து 1,80,000 பிரதிகள் அச்சிட்டு பல மாகாணங்களுக்கும், வெளிநாட்டு தமிழர்களுக்கும் அவர்களின் விருப்பப்படி அனுப்பப்பட்டுள்ளது. இது தவிர அடியேன் யாத்திரையின் போது பல ஸ்தலங்களிலும் விநியோகிக்கப்பட்டது. பல பக்தர்கள் இப்பணியைதொடர்ந்து நடத்தும்படியும் முன்னைய நூல்கள் மீண்டும் சில பிரதிகள் வெளியிடும்படி வேண்டியுள்ளனர்.

ஆனால் தற்சமயம் உள்ள கால நிலையில் சிறிது யோசிக்கும்படி உள்ளது. வெளியீடுகளில் பதிப்புரிமை இல்லை. யாரும் அச்சிடலாம். ஆனால் இதுவரை யாரும் முன்வரவில்லை. ஆனால் அடியேன் ஆதிபராசக்தியின் அருள் இருக்கும்வரை என்னால் முடிந்த அளவு பணிசெய்ய கடமைப்பட்டவன். பக்தர்கள் ஊக்கம் அளித்தால் இப்பணியை தொடர்ந்து செய்ய தயாராக இருக்கிறேன். அடியேனைக்காட்டிலும் பக்த அறிவுமிக்கவர்கள் வெளியிட்ட பலநூல்கள் விலை கொடுத்து வாங்க பலரால் இயலவில்லை. இவர்களின் கஷ்டத்தை எண்ணி அறியமுடியாத அபூர்வ அறிவை இளம் சந்ததியர்க்கு அளிக்க பல பக்தர்களின் வேண்டுகோள்படி இன்னும் பல நூல்களும் வெளியிட பல வசதியுள்ள பக்தர்கள் உதவிட முன்வந்தால், என்னால் முடியும்.

ஞான பிரகடனம் விக்ஞான நௌகா

அறிவுக் கப்பல்

என்கிற திருநாமத்துடன் வெளியிடுவதாக உத்தேசம்,

நம் ஹிந்து மதத்திற்கு ஞான பிரகடனம் செய்தவர் வேதவியாசர். இவரிலிருந்து ஆச்சார்யார்கள்இவர்களுடைய பரம்பரைகள் நாயன்மார்கள், வர்கங்கள் வேறுபாடு இல்லாமல் வெளியீட்டில் தத்துவங்கள் இருக்கும். இப்பிரதிகள் ஆண்டில் சுமார் 20 முதல் 25 வரை வெளியிட மதிப்பிட்டுள்ளேன். இந்த பணியில் பக்தர்கள் தங்களுடைய இளம் சந்ததிகள் உத்தேசித்தும் மற்றும் உறவினர்கள் வேண்டியவர்கள் சந்ததிகளையும் உத்தேசித்து அவர்களுடைய நற்பயன்களுக்காகவும் இவ்விதழ்கள் தவறுமல் பெற வேண்டியவர்கள் தங்களால் முடிந்த சக்திக்கு நன்கொடை அனுப்பி தங்களுடைய பெயர்கள் பதிவு செய்துகொள்ளலாம்.

ஓம் சக்தி — சக்தி சிவம்.

குணமும் — மணமும்

தர்மம் வாழி! தார்மிகர் வாழி! தார்மிக பத்திரிகைவாழி!

தாய்மார்களே! சகோதரிகளே! பெண்காள்! நீங்களே நாட்டின் உயர்நிலை, உங்கள் தூய்மையில்தான நாட்டின் க்ஷேமம் நிற்கிறது. உங்களைப் பின்பற்றியே உங்கள் மக்களும் வளர்வர். கேடுதரும் பகட்டு வாழ்க்கையால் அழிந்துவரும் உலகை உங்கள் பரிசுத்த வாழ்க்கையால் புனிதப்படுத்துங்கள்.

"உண்மையான அலங்காரம் என்பது உடல் முழுவதும் உலோகத்தையும், கற்களையும் சுமந்துகொண்டிருப்பதல்ல. இதயத்தை தூய்மை படுத்தி ஆத்மாவின் அழகைப் பெருக்கிக் கொள்வதேயாகும் என்பதைப் பெண்கள் உணரவேண்டும்.

பெண்களின் நிலை உயரும்போது ஆண்களின் நிலை உயரும். இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்.

பதிவரதைகளின் புண்ணிய சரித்திரத்தைப் படியுங்கள்.

தர்மம் வாழி! தார்மீகர் வாழி!

சுபமங்களம்.

விலை ரூ 0-50

வெளியீடு-16

மீனாக்ஷி இராமன், (ஸ்வாமி)

பிரதிகள் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்தில்

இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்

1. ராணி பர்னிச்சர்
21, மேலாவணி மூலவீதி, மதுரை.

2. எஸ். ஏ. எலக்ட்ரிகல்ஸ்
ஏட்கா கட்டிடம் ஆரப்பாளையம், மதுரை.

3. லாட்ஜ் விக்னேஸ்வரா
13, ஆனைப்ப முதலிதெரு, மதுரை.

ஸ்ரீ ராமகிருஷ்ணா பிரஸ், மதுரை-77